1969 மார்ச் 4]

மாண்புமிகு திரு ஓ. பி. ராமன் : இந்தச் சாமான்கள் வாங்கப்படுவது டெண்டர்கள் மூலந்தான்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்த விவர அறிக்கையில் தனியார் துறை விலை பற்றி மாத்திரந்தான் இருக்கிறது. பொதுத் துறையில் கூட ஸ்டீல் போஸ்ட்கள் உற்பத்தி செய்யப்படுவதாகத் தெரிய வருகிறது. பொதுத் துறையில் இவற்றை வாங்குகிறார்களா இல்லையா என்ற விவரத்தைச் சொல்லமுடியுமா ?

மாண்புமிகு திரு ஓ. பி. ராமன் : தனிக் கேள்வி போடவும்.

திரு. நா. காசிராமன் : 1966–67-ம் ஆண்டுக்குப் பிறகு இம்மாதிரிக் கம்பங்கள் வாங்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவ்வாறு வாங்காததற்குக் காரணம் ரீயின்ஃபோர்ஸ்ட் கான்க்ரீட் போஸ்டுகளைப் பயன்படுத்துவதுதான் என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு ஓ. பி. ராமன் : அதற்கான விவரம் இல்லை.

திரு. சி. கிருஷ்ணமூர்த்தி : மின்சார போர்டுக்குத் தேவையான சாமான்களைச் சர்க்கார் கோவாப்பரேடிவ் சொஸைடியின், கோவாபரேடிவ் இன் ஸ்ட்ரியஸ் சொஸைடீஸ் போன்ற ஸ்தாபனங்களின் மூலம் வாங்குவதால் அந்த ஸ்தாபனங்களுக்கு ஊக்கம் அளிப்பதாக இருக்கும் என்ற காரணத்தால் இனிமேலாவது அத்தகைய ஸ்தாபனங்களிடமிருந்துசர்க்கார் காரியங்களுக்கான சாமான்களை வாங்குவதற்கு அரசு ஊக்கம் அளிக்குமா ?

மாண்புமிகு திரு ஓ. பி. ராமன் : இது ஒரு நல்ல யோசனையாகக் கருதப்படும்.

அமைச்சர்களுக்கு வாங்கப்பட்ட புதுக் கார்கள்.

* 14—வினா : திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அமைச்சர்களின் உபயோகத்திற்காகப் புதிய கார்கள் எத்தனை வாங்கப்பட்டன ?

(இ) அவற்றின் ரகங்களின் விபரமும், விலையின் விபரமும் யாவை ?

(உ) பழைய கார்கள் என்ன செய்யப்பட்டன ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி :

(அ) அமைச்சர்கள் பயன்படுத்துவதற்காக ஒன்பது புதிய அம்பாசடர் மோட்டார் வண்டிகள் அரசாங்கத்தினால் வாங்கப்பட்டன.

(இ) விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

தொடர் எண்.	வண்டியின் வகை, எண், பெயர்.	மொத்த விலை	
எண். (1)	(2)	(3)	
		ரூ.	காசு.
1	MSR—7007 (அம்பாசடர்)	19,327	39
2	MSR—9999 (அம்பாசடர்)	19,327	39
3	MSR—9009 (அம்பாசடர்)	19,327	39
4	MSR—9090 (அம்பாசடர்)	19,327	39
5	MSR— 696 (அம்பாசடர்)	19,327	39
6	MSR—9955 (அம்பாசடர்)	19,327	39
7	MSR—7777 (அம்பாசடர்)	19,327	39
8	MSR—9393 (அம்பாசடர்)	19,327	39
9	MSQ—2728 (அம்பாசடர்)	19,617	90

(உ) பழைய மோட்டார் வண்டிகள், தலைமைச் செயலகத்தில் உள்ள பிற மோட்டார் வண்டிகளுடன் சேர்க்கப்பட்டு விட்டன.

திரு. ரா. ராமச்சந்திர துரை : இந்தக் கார்கள் எல்லாம் எந்தக் கம்பெனியில் இருந்து வாங்கப்பட்டன ? இவை வாங்கப்பட்ட கம்பெனிகள் டிஸ்குவாலிபை செய்யப்பட்டதா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : போன சர்க்கார் இருந்தபோது எந்தக்கம்பெனியில் இருந்து வாங்கப்பட்டனவோ அதே கேவ்ராஜ் கம்பெனியில் இருந்துதான் வாங்கப்பட்டன. அவை அமைச்சர்களுடைய உபயோகத்திற்கு சரியாக இல்லாமல் அடிக்கடி பழுது ஏற்பட்ட காரணத்தால், அது நிரூபிக்கப்பட்ட காரணத்தால் வேறு கம்பெனியில் இருந்து வாங்க முடிவு செய்யப்பட்டது.

திரு. கரு. சிமைச்சாமி : அமைச்சர்கள் தற்போது சிறிய கார்களில் பிரயாணம் செய்கிறார்கள். குறிப்பிட்ட இடத்திற்கு, குறிப்பிட்ட நேரத்தில் போய்ச் சேரவேண்டுமென்ற நிலையில் சிறிய கார்களில் பயணம் செய்யும் போது விபத்துகள் ஏற்படக்கூடிய நிலை உண்டாகிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்குக் கூட முன்பு ஒரு முறை அத்தகைய விபத்து ஏற்பட்டது. ஆகவே, கொஞ்சம் பெரிய கார்களை உபயோகிப்ப துபற்றி அமைச்சர்கள் யோசிப்பார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கூடுமானவரை அமைச்சர்கள் இப்போது ரயில் பிரயாணத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தந்த மாவட்டங்களில் இருக்கும் கார்கள் பயன்படுத்தப்படுகின்றன. இப்போது மீடியம் அளவு கார்களை வாங்கலாமா என்ற யோசனை இருக்கிறது.

திரு. எம். பூபதி : இந்தக் கார்கள் டெண்டர் மூலம் வாங்கப்பட்டதா அல்லது கொடேஷன் மூலம் வாங்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : அவைகளுக்கு நிலையான விலை உள்ளது.

விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட தொழிலாளி மரணம்.

* 50—வினா : **திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரையில் 1968-ம் ஆண்டு மே மாத இறுதியில் போலீஸ் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட "பென்னர் காக்கில்" கம்பெனியில் வேலை பார்த்த வேலு என்பவர் இறந்தாரா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

(உ) இது சம்பந்தமாகப் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் சஸ்பெண்ட் செய்யப்பட்டாரா ?

(எ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : (அ) மதுரை, ஃபென்னர் காக்கில் லிமிடெட்டின் தொழிலாளியான வேலு என்பவர் சிறுநீர் கோளாறு குறித்து சிகிச்சை பெறுவதற்காக 27—5—1968 அன்று மதுரை, அரசாங்க எர்ஸ்கின் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். 29—5—68 தேதியன்று அவர் மருத்துவமனையில் இறந்து விட்டார்.

(இ) கிட்னி கோளாறு காரணமாக இந்த மரணம் ஏற்பட்டது.

(உ) and (எ) மதுரை, ஃபென்னர் காக்கில் லிமிடெட் பொது நிர்வாகி தொடர்ந்துள்ள திருட்டுக் குற்ற வழக்கில் வேலு சந்தேகத்துக்குரியவர் ஆவார். இவ்வழக்கு, பி-6 (துப்புத்துலக்கும்) காவல் நிலையத்தில் 16—5—68 தேதி யன்று 568-68 எண் குற்ற வழக்காகப் பதிவு செய்யப்பட்டது. 16—5—1968 தேதியன்று பிற்பகல் வேலுவை காவல்துறை துணை மேற்பார்வையாளர் விசாரணை செய்து அன்றே அவரை அனுப்பி விட்டார். குற்றவாளியான வேலு மருத்துவ மனையில் சேர்க்கப்படுவதற்கு சுமார் 10 நாட்களுக்கு முன்னதாக அடிக்கப்பட்டதாக பி-6 (துப்புத் துலக்குதல்) காவல் நிலைய குற்றவிசாரணைப் புணியாளர் மீது புகார்